ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2350/15 - 2023 සැප්තැම්බර් මස 18 වැනි සඳුදා - 2023.09.18

2350/15 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: RUW/LAN/ACQTN/A2/258.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்: 4-3/18/2019/WS/599.

பொதுமக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத் தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

ருவன்வல்லை பிரதேச செயலாளர் பிரிவில் கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவங்கொடை ஒன்றிணைக் கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் பஸ்னாகொட நீர்த் தேக்கம் காரணமாக தாக்கத்திற்கு உள்ளாகின்ற ருவன்வல்லை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 07 குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்காக காணி எடுத்தல் - மாகல்கந்த.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் ருவன்வல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 101, வஹரக்க கிராம அலுவலர் பிரிவில் வஹரக்க கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் ஆரம்ப வரைபட இலக்கம் 3847 மற்றும் 2022.05.30 ஆந் திகதிய வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள 1.0355 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: மாகல்கந்த வத்த; ஆரம்ப உரிமை கோருவோர்: மல்வத்த வெலி பெருந் தோட்டக் கம்பனி, இலக்கம் 280, டாம் வீதி, கொழும்பு 12; விஸ்தீரணம்: 0.0139 ஹெக்டயார்.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

02. **துண்டு இல. 02**

காணியின் பெயர்: - ; ஆரம்ப உரிமை கோருவோர்: மல்வத்த வெலி பெருந் தோட்டக் கம்பனி, இலக்கம் 280, டாம் வீதி, கொழும்பு 12; விஸ்தீரணம்: 0.0128 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 03**

காணியின் பெயர்: - ; ஆரம்ப உரிமை கோருவோர்: மல்வத்த வெலி பெருந் தோட்டக் கம்பனி, இலக்கம் 280, டாம் வீதி, கொழும்பு 12; விஸ்தீரணம்: 0.0660 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 04**

காணியின் பெயர்: மாகல்கந்த வத்த; ஆரம்ப உரிமை கோருவோர்: மல்வத்த வெலி பெருந் தோட்டக் கம்பனி, இலக்கம் 280, டாம் வீதி, கொழும்பு 12; விஸ்தீரணம்: 0.9428 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ருவன்வல்லை பிரதேச செயலகத்தில் என் முன்னிலையில் வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மை யையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங் களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். டி. எஸ். என். ஹெட்டிகே,
பிரதேச செயலாளர்,
ருவன்வல்லை.

பிரதேச செயலகம்,
ருவன்வல்லை,
2023, செத்தெம்பர் 15.

EOG 09 - 0141

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: THI/LND/L/2/ACQVI/119.
காணி அமைச்சின் தொடர்பு இலக்கம்: 4-3/9/2014/WS/02.

திஹகொட பிரதேச செயலாளர் துமின்கு ஹேவாகே உதயான்கனி சந்தமாலி ஆகிய நான் மாத்தறை IV ஆவது கட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் கல்கெடிய நிலக்கீழ் நீர்த்தேக்கம் மற்றும் நிலையப் பொறுப்பாளருக்குரிய உத்தியோகபூர்வ விடுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி களை எடுத்தல் செயற்திட்டத்தின் கீழ் காணிப்பகுதி களை எடுத்துக்கொள்வதற்காக வெளியிடப்பட்ட 2021.04.06 ஆந் திகதிய 2222/30 ஆம் இலக்க மற்றும் 2021.10.12 ஆந் திகதிய 2249/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட் டுள்ள 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டதன் பிரகாரம் காணி எடுத்தல் சட்டத் தின் (460 ஆவது அத்தியாயம்) 7 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தலின் திருத்தப்பத்திரத்தின் உரித்தினை பரீட்சித்துப் பார்க்கும் திகதி 2023.09.23 ஆம் திகதி எனவும், அதற்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதி 2023.09.20 ஆந் திகதி எனவும், எடுத்துக்கொள்ளும் காணிக்குரிய ஆரம்ப திட்டப்பட இலக்கம் 2909 எனவும், காணித்துண்டு இலக்கங்கள் 01 மற்றும் 02 எனவும், காணித் துண்டு இலக்கம் 01 இன் விஸ்தீரணம் 0.1260 ஹெக்டயார் எனவும் மற்றும் காணித்துண்டு இலக்கம் 02 இன் விஸ்தீரணம் 0.0113 ஹெக்டயார் எனவும் திருத்தஞ் செய்யப்பட வேண்டும் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

டி. எச். யூ. சந்தமாலி,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்
திஹகொட.

பிரதேச செயலகம்,
திஹகொட,
2023, செத்தெம்பர் 11.

EOG 09 - 0143